# ISRB EXPO FORUM™


## Indian Small & Rural Business Exposition

(A Unit of Puthiya Thalaimurai Foundation)

ISRB/WEBINAR/012

*A Report*

# Webinar on Government Loan Schemes and Subsidies for Entrepreneurs






Inaugural Address by Er. N. Elangovan, Regional Joint Director of Industries & Commerce, Micro Small & Medium Enterprises Department, Government of Tamil Nadu, Chennai

## *Highlights*

- *Loan and Subsidy Schemes for Start-up & Existing Entrepreneurs*
- *Loan and Subsidy Schemes for Agro-based industries, Food Processing &Traditional industries*
- *55 delegates including Entrepreneurs, Employed People, Students & House wives etc.*

---

PUTHIYA THALAIMURAI FOUNDATION

*(A People-based movement working for Youth Development, Rural Education, Environment & Healthcare- One of the Largest NGOs in India)*

# ஐ.எஸ்.ஆர்.பி. எக்ஸ்போ மன்றம்

இந்திய சிறு மற்றும் கிராமப்புறத் தொழில்களுக்கான மையம்

(புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஓர் அங்கம்)

## தொழில்முனைவோர்களுக்கான அரசின் கடன் திட்டங்கள் மற்றும் மானியங்கள் - 4 நாள் இணையவழி கருத்தரங்கம் - மே 16 -19, 2023

புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஐ.எஸ்.ஆர்.பி. எக்ஸ்போ மன்றம் சார்பில் தொழில் முனைவோர்களுக்கான அரசின் கடன் திட்டங்கள் மற்றும் மானியங்கள் - 4 நாள் இணையவழி கருத்தரங்கம் மே 16 -19, 2023 ஆகிய நான்கு நாட்கள் நடைபெற்றது. புதிய தலைமுறை அறக்கட்டளையின், பொதுமேலாளர் - திட்டங்கள் ச.சுரேஷ் கண்னன், வரவேற்புரை வழங்கி பேசுகையில் நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர், அரசு அதிகாரி Er. N. Elangovan, Regional Joint Director of District Industries and Commerce, Government of Tamil Nadu, மற்றும் . பயிற்சியாளர் திரு. S.Sivaraman, Advocate, Consultant & Trainer, Export - Import / Customs / MSME Chennai ஆகியோரை அறிமுகம் செய்து வைத்து, அதனைத் தொடர்ந்து அறக்கட்டளையின் திட்டங்கள் பணிகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

இக்கருத்தரங்கினை துவக்கி வைத்து Er. N. Elangovan, Regional Joint Director of District Industries and Commerce, Government of Tamil Nadu, அவர்கள் பேசுகையில் அனைவருக்கும் தொழில் தொடங்க வேண்டும் என்ற ஆவல் உள்ளது. ஆனால் என்ன தொழில் தொடங்க வேண்டும் அதற்கான வழிமுறைகள் தெரியவில்லை படித்த இளைஞர்களை தொழில்முனைவோர்களாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழக அரசின் சார்பில் மாவட்ட தொழில் மையங்கள் இயங்கி வருகின்றன. இந்த மாவட்ட தொழில் மையங்களின் நோக்கம் சிறு, குறு, நடுத்தர தொழில்களை ஊக்குவிப்பதும் தொழில் கூட்டுறவு அமைப்புகளை ஊக்குவிப்பதுமாகும். இதன் தலைமைப் பொறுப்பில் ஒரு பொது மேலாளர் இருப்பார்கள்.



Er. N. Elangovan, Regional Joint Director of District Industries and Commerce,, Government of Tamil Nadu, அவர்கள் கருத்தரங்கினை துவக்கி வைத்து சிறப்புரையாற்றிய காட்சி

தொழில் நுட்பங்களையும், தொழில் வணிக்கடன் குறித்த தகவல்கள், தொழில் ஆலோசனைகள், மத்திய, மாநில அரசின் தொழில் திட்டங்கள், உதவிகளை எப்படி பெறுவது என்பது குறித்த தகவல்கள், தொழில் தொடங்க பதிவு செய்ய வேண்டிய தகவல்கள் குறித்து அனைத்து வழிகாட்டுதல்களையும் வழங்குவதற்கு எல்லா மாவட்டத்திலும் மாவட்ட தொழில் மையத்தில் பொது மேலாளர்கள், இனை இயக்குநகர்கள் உள்ளனர். மேலும் அனைத்து மாவட்டங்களிலும் அரசின் சார்பில் தொழில் கருத்தரங்கங்களையும் நடத்தி அதன் மூலம்




சென்னையைப் பொறுத்த வரையில் சென்னை கிண்டியில் இயங்கி வரும் தொழில் மற்றும் வணிகத் துறை, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் ஆகியவை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான தொழில் அனுமதி மற்றும் மானியம் வழங்குதல், தொழிற்சாலைகள் ஒதுக்கீடு செய்தல், உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல், தொழிலாளர்களுக்குத் தேவையான தளவாடங்களை வழங்குதல் போன்ற முக்கியப் பணிகளை செய்துவருகின்றன. தமிழ்நாடு தொழில் வணிகத் துறை கீழ்க்கண்ட இடங்களில் சிறப்புத் தொழிற்பயிற்சி மையங்களை நிறுவி மாணவர்கள்/தொழில்முனைவோருக்கு உதவி வருகிறது என்பன போன்ற பல்வேறு தகவல்களை வழங்கினார்.

மே 16 - 19, 2023 4 நாட்கள் நடைபெற்ற நிகழ்வில் பயிற்சியாளர் சிவராமன் பேசுகையில் ஒரு தொழிலை துவங்கும் முன் தொழிலை தெரிவு செய்தல், தொழில் நுட்பம், சந்தை வாய்ப்புகள், முதலீடு எவ்வளவு, அரசு அனுமதிகள் போன்ற தகவல்களை தெரிந்து கொள்ள வேண்டும். முதலில் தொழில் கடன் வேண்டும் என்றால் எந்த தொழிலை செய்யப்போகிறீர்களோ, அத்தொழில் குறித்த விரிவான திட்ட அறிக்கையினை தயார் செய்து கொள்ளவேண்டும். எல்லா வகை தொழில்களுக்கும் தொழில் திட்ட அறிக்கை மாதிரியினை கீழ்கண்ட இணையதளங்களில் சென்று பார்வையிடலாம்.

**https://my.msme.gov.in/MyMsmeMob/MsmeProjectProfile/Home.htm**
**http://www.msmedi-chennai.gov.in/GARMS_Admin/ProjectProfiles.aspx**
**https://www.kviconline.gov.in/pmegp/pmegpweb/docs/jsp/newprojectReports.jsp**
**https://www.kviconline.gov.in/pmegpeportal/pmegphome/edp_projects.jsp**

# ஐ.எஸ்.ஆர்.பி. எக்ஸ்போ மன்றம்

இந்திய சிறு மற்றும் கிராமப்புறத் தொழில்களுக்கான மையம்

(புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஓர் அங்கம்)


## தொழில்முனைவோர்களுக்கான அரசின் கடன் திட்டங்கள் மற்றும் மானியங்கள் - 4 நாள் இணையவழி கருத்தரங்கம் - மே 16 -19, 2023

மேலும் பேசுகையில் 1.NEEDS 2. PMEGP 3. UYEGP கடன் திட்டங்கள் குறித்து விரிவான தகவல்களை எடுத்துரைத்தார். முதல் தலைமுறை தொழில் முனைவோரின் முதல் தொழில் முயற்சிக்கு கை கொடுக்கவும் ஊக்கமளிக்கவும் என தனித்துவமாக செயல்படுத்தப்பட்டு வரும் NEEDS திட்டத்தின் பணிகள், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் / வணிக வங்கிகள் / தாய்கோ வங்கி மூலமாக கடனுதவி பெறும் வழிமுறைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். தனி நபர் முதலீட்டு மானியம் திட்டத்தொகையில் 25% (உச்ச வரம்பு ரூபாய் . 75 லட்சம்) வட்டி மானியத்தினை திரும்ப செலுத்தும் காலம் குறித்த தகவல்கள் மானியங்களை பெற விண்ணப்பம் செய்வதற்கு msmeonline.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவு செய்யும் முறைகள் குறித்தும் பல்வேறு பயனுள்ள தகவல்களை வழங்கினார்.




UYEGP: வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டம். விண்ணப்பம் செய்பவரின் வயது வரம்பு, கல்வித் தகுதி, குடும்ப ஆண்டு வருமானம் குறித்து தகவல்கள், உற்பத்தி, வியாபாரம் / சேவை தொழில் திட்டங்களுக்கான அதிக பட்ச திட்ட மதிப்பு ரூ.15 லட்சம் / ரூபாய் 5 லட்சம் / ஆகும், தொழில் முனைவோர் பங்களிப்பு குறித்த தகவல்களையும் தொகுத்து வழங்கினார். மேலும் பேசுகையில் பாரதப்பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டம் (PMEGP) நோக்கம் சுயவேலைவாய்ப்பினை ஊக்குவிப்பதற்காகவும் வேலைவாய்ப்பின்மைச் சிக்கலைத் தீர்ப்பதற்காகவும் ஒன்றிய அரசின் நிதி கொண்டு செயல்படுத்தப்படும் திட்டம் ஆகும். கடன் வழங்கும் அமைப்புகளின் வணிக வங்கிகள் மூலம் கடனுதவி பெறும் வழிமுறைகள் விண்ணப்பிக்கும் முறைகள் அதற்கான இணையதளம் kviconline.gov.in/pmegpeportal குறித்த முழு விவரங்கள், மானியத்திட்டத்தின் வகைகளான முதலீட்டு மானியம், குறைந்தழுத்த மின் மானியம், மின்னோக்கி மானியம், பின்முனை வட்டி மானியம், தரச்சான்றிதழ் பெறுவதற்கான மானியம், சம்பளப்பட்டியல் மானியம், பிறதிட்டங்கள் பற்றிய தகவல்கள், விண்ணப்பிக்கும் வழிமுறைகள், தகுதிகள் மற்றும் காப்புரிமை பதிவு / வர்த்தக முத்திரைப்பதிவு, புவிசார் குறியீடு பதிவுக்கான ஊக்கத்தொகை பெறும் வழிமுறைகள் குறித்து விரிவான தகவல்களை தொகுத்து வழங்கினார்.

பிரதான் மந்திரி முத்ரா யோஜனா திட்டம் (PMMY) - சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் (MSME) வளர்ச்சிகளுக்காக இந்திய அரசால் உருவாக்கப்பட்டது தான் இந்த பிரதான் மந்திரி முத்ரா யோஜனா திட்டம் (PMMY). பத்துலட்சத்திற்கும் குறைவான அளவு கடன் தேவைப்படும் பண்ணை சாரா உற்பத்தி நிறுவனங்கள், வர்த்தகம் மற்றும் சேவை நிறுவனங்களுக்கு இந்த கடன் வழங்கபடுகிறது.




S.Sivaraman, Advocate, Consultant & Trainer, Export - Import / Customs / MSME Chennai **அவர்கள் சிறப்புரையாற்றிய காட்சி**

1) சிஷு: இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு 50 ஆயிரம் ரூபாய் வரையிலான கடன் தொகை அதிகபட்சமாக ஐந்து ஆண்டுகளில் திருப்பிக் கட்ட கூடியவகையில் வழங்கப்படுகிறது.

2)கிஷோர்: ஏற்கனவே தொழிலை நடத்தி வரும் சிறு நிறுவனங்களுக்கு அடுத்த கட்ட முயற்சி எடுத்து வைக்கும் நோக்கில் 5 லட்சம் ரூபாய் வரை கடன் தொகை இந்த கிஷோர் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது. முத்ரா கிரெடிட்டின் கீழ் கிஷோர் கிஷோர் திட்டத்தின் மூலம் வாங்கும் கடனாளிகளுக்கு திருப்பி செலுத்தக்கூடிய கால அளவை நிர்ணயிக்கும் உரிமை அந்தந்த வங்கிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நீங்கள் பயன் பெற வேண்டுமென்றால் உங்களிடம் கடந்த வருடத்திற்கான வங்கி பரிமாற்ற சான்றிதழ்கள், வருமானவரி சான்றிதழ்கள், தொழில் குறிக்கோள் அடங்கிய மெமோராண்டம் சான்றிதழ்கள் மற்றும் நடப்பு நிதியாண்டின் விற்பனை கணக்கு போன்றவற்றை சமர்ப்பிக்க வேண்டும். ஒரு சில தொழில் ஆரம்பிப்பதற்காக இந்த கிஷோர் திட்டத்தை பயன்படுத்த வாய்ப்பு இருந்தாலும் வங்கிகளுக்கு வழங்கப்பட்ட வரையறையின் கீழ் கடன் பெற முடியும்.

3. தருண்: பெரிய அளவிலான வணிக திட்டம் மற்றும் வணிக வளர்ச்சியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் தொழில் நிறுவனங்களுக்கு 5 லட்சம் ரூபாய் முதல் 10 லட்சம் ரூபாய் வரையிலான கடன் தொகை இந்த தரும் திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெறும். கிஷோர் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட சான்றிதழ் அனைத்துமே இந்த தருண் திட்டத்தில் கடன் பெற நினைப்பவர்களுக்கும் பொருந்தும். பிரதான் மந்திரி முத்ரா கடன் நடவடிக்கைகளின் கீழ், தொழில்முனைவோர் சில தகுதி அடித்தளங்களை சந்தித்தால் தருண் ரூ .10 லட்சம் வரை ஒப்புதல் அளிக்கிறார்.

# ஐ.எஸ்.ஆர்.பி. எக்ஸ்போ மன்றம்

**இந்திய சிறு மற்றும் கிராமப்புறத் தொழில்களுக்கான மையம்**


**(புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஓர் அங்கம்)**

## தொழில்முனைவோர்களுக்கான அரசின் கடன் திட்டங்கள் மற்றும் மானியங்கள் - 4 நாள் இணையவழி கருத்தரங்கம் - மே 16 -19, 2023


அனைத்து வகையான உற்பத்தி, சேவை மற்றும் வியாபாரம் செய்யும் அனைவரும் இத்திட்டத்தில் பயன் பெறலாம். உதாரணமாக சரக்குகனை எடுத்து செல்ல வாகனம் வாங்குவதற்கு, முடி திருத்தும் நிலைய மேம்படுத்த ,பியூட்டி பார்லர் மேம்படுத்த, மோட்டார் சைக்கிள் ரிப்பேர் கடை விரிவுபடுத்துதல், சிற்றுண்டி உணவு கடைகள், தள்ளுவண்டி காய்கறி பழகடைகள், துணிகடைகள், பேக்கரி கடைகள் விரிபடுத்துதல், எஜென்சிஸ் வைத்தல், என அனைத்து புதிய மற்றும் ஏற்கனவே நடைபெறும் நிறுவனங்க்ளும் இதில் கடன் பெறலாம்.


கடன் பெறுவதற்கு தேவையான ஆவணங்கள், தகுதிகள், பெண்கள் தொழில்முனைவோர்கள் கடன் பெறுவதற்கு Standup India Scheme, குறித்த தகவல்கள், கடன் வழங்கப்படு தொகை, தகுதிகள், பயனாளி பங்களிப்பு, கடனைத் திரும்ப செலுத்தும் கால அளவு குறித்த தகவல்கள், Standupmitra.in இணையதளம் குறித்த தகவல்கள். பதிவு செய்யும் முறைகள், வங்கித் தொடர்புகள், வங்கி மேலாளரை அனுகும் வழிமுறைகள், விண்ணப்பம் செய்யும் முறைகள், பண்ணைத் தொழில் கடன் திட்டங்கள், தேசிய கால்நடைத்திட்டம், மத்திய அரசின் நபார்டு வங்கி திட்டம் குறித்த தகவல்கள், கோழி பண்ணை அமைத்தல், ஆட்டு பண்ணை, முயல் பண்ணை, பன்றி வளர்ப்பு போன்ற தொழில்களுக்கு நபார்டு வங்கியில் விண்ணப்பம் செய்யும் வழிமுறைகள், மானியம் பெறும் வழிமுறைகள், கடனைத் திரும்ப செலுத்தும் முறைகள், தேவையான ஆவணங்கள், கடன் தவணைக்காலம் போன்ற பல்வேறு தகவல்களை விரிவாக எடுத்துரைத்தார். ஷிமிஞிஙிமி என்பது சிறு, சிறு மற்றும் நடுத்தர தளம் மூலம் டேர்ம் லோனை விரைவாக வழங்குதல். இந்த வங்கி மூலம் கடன் பெறும் வழிமுறைகள் குறித்து விரிவாக பல்வேறு தகவல்களை எடுத்துரைத்தார்.

மேலும் இக்கருத்தரங்கில் சென்னை, திருச்சி, மதுரை, தர்மபுரி, கன்னியாகுமரி, தஞ்சாவூர், செங்கல்பட்டு, கிருஷ்ணகிரி, கடலூர், ஈரோடு, பெரம்பலூர், விருதுநகர், கோயம்புத்தூர், திருவள்ளூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் இருந்து 55க்கும் மேற்பட்ட தொழில் முனைவோர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.








No: 24, G. N. Chetty Road, T.Nagar, Chennai - 600 017 | Mobile: 8754417500
Email: isrbexpo@ptfindia.org | Website: www.isrbexpo.org